[illegible]

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

பத்திரிகை கிரயம்

வருஷம் 1-க்கு	2	12	0
மீ 6-க்கு	1	8	0
மீ 3-க்கு	0	14	0
காபி 1-க்கு	0	2	6
இலங்கைக்கு	3	8	0.

பத்திராதிபருக்கு மணியார்டர் ராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிள்களாவது சிதம்பரம் ப்ரம்மவித்யா பத்ரிகா ஸ்மாலுக்கு அனுப்பவேண்டும்.

[illegible]

௩-ம் புத்தகம். } சிதம்பரம்:— சர்வதாரி௵ ஆடிமீ ௨உ-க்கு
௧௮௮௮௵ ஜூலைமீ ௰௫ ஞாயிற்றுக்கிழமை. { இலக்கம்-௨.

[illegible]

[illegible]

இராதாகிருஷ்ணன் வாழ்க.

ஐயா, ஸ்ரீப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களே! அநேக வந்தனங்கள். தமது ப்ரம்மவித்தை யென்னு மங்கை அடி தொடங்கி முடிவரையில் பலவித்துவான்களின் உபந்நியாசமென்னும் போணியைப் பூண்டு வெளிவர யாம் கண்டு மகிழ்ந்து யாமும் எம்மா லியன்றமட்டும் இத் தேன் மொழியாளுக்குத தென்மொழி வடமொழி என விருமொழிகளடங்கிய ஓர் புஷ்பமாலையை அனுப்பினேன்; அஃதை அவள் திருமேனியிலணிவாளெனக் கருதுகிறேன்.

ஐயா, சிறிதுகேண்மின்! தமது கருணையைநோக்கி அவசியமான சிலவிஷயங்களை அறிய விரும்பி சிலசங்கதிகளைக் கேட்கலுற்றேன். இப்பொழுது எங்கும் கடுமையாய் நிற்கும் தன் மதவிஷயங்களைத் தைரியமாய்க் கண்டித்துச் சீர்திருத்திவரும் தங்கள் முன்னிலையில் நின்றெதிர்த்து ஓர் சங்கதியை எழுதவாயினுங் கேட்கவாயினும் எம்போலியர்களான புல்லறிவாளர்களுக்குச் சக்தியில. ஆயினுந் தமது நண்பு என்னை இவ்விஷயத்தை வரையும்படி தூண்டிற்று. இனித் தாங்கள் என்னிடம் சினங்கொள்ளாமலிருக்க வேண்டுகிறேன். ஸ்ரீமத் கண்ணபிரானுக்கு ஜாரன் என்பதும் சோரன் என்பதும் புகழ்மொழிகளாகவே புலப்படுகின்றதல்லவா? சந்திரனுக்குக் குறியாயிருக்கும் ஓர் கறுப்புப் புள்ளி அலங்காரமாகுகின்றதல்லவா? அவ்விதம் பொதுத் தன்மையை நாடி அபிநயித்துவரும் தங்களுக்கும் சிலவிடம் ஓர் சார்பாகநிற்றலும் அழகே; குற்றமாகா. என்றாலும் சிறுபல சாஸ்திரிகளும், சுந்தரராஜசாஸ்திரிகளின் சீடரும் எழுதிய விஷயத்தில் தாம் குற்றம்காட்டியது அவரது அ

[illegible]

ர்ப்பாக்கியமென்றே கருதுகிறேன். இவ்வுலகில் ஏனையவர் குற்றத்தைக் காண்பதே தமக்குக் குலவிருதாகக் கொண்டு மனவருடவர்களிருந்தார்கள்; இருக்கின்றார்கள்; இருப்பார்கள். உலகத்தில் நடுவுநிலைமையை நாடிப் பத்திராதிபராய்ச் சேருந் தங்களுக்கு அஃதவ்வளவு அலங்காரமல்ல. பத்திராதிபர்களுக்குப் பட்சபாதம் பேர் விரோதமென்றுணர்க. எவரெவர் எவ்விதமெழுதினும் அப்பத்திரிகை தங்களிடம் வர, அவைகளைத்தாங்கள் பரிசோதித்து, தமது பத்திரிகையின் 6-வது இலக்கத்தில்கண்ட குறிப்பின் பிரகாரம் இல்லாவிடில் மறுத்துவிடலாம். அவ்விதமிருப்பின் ஒப்பி வெளியிடலாம். அங்ஙனமில்லாது தமது பத்திரிகையின் வாயிலாக விவாதம் செய்துவரும் இருவர்கள் கொள்கையில் தாங்கள் புகுந்து "படிக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் பாத்தியமில்லை" என்கிற தமது ஏற்பாட்டையும் மறந்து "குறிப்பு" என்னும் மகுடத்தின்கீழ் எழுதிய விஷயம் யாதுகாரணம்பற்றியோ தெரிந்திலன். தமது பத்திரிகை துவக்கி இதுகாறும் இப்படிப்பட்ட விஷயம் நிகழக் கண்டிலன். இங்கு இவ்விதம் எழுதியது எக்காரணங்கொண்டோ? முன் சில விடங்களி லெழுதியதும் பொதுநன்மையை நாடியேயிருந்தது. தற்காலமெழுதிய "சாதகர்களுக்கு ஓர் அறிவிப்பு" என்பதுமட்டில ஓர் சார்பினைத்தழுவுகின்றது. அவ்விதம் எழுதிய விஷயத்தில் தக்க காரணமிருப்பின் அஃதை எடுத்துக்காட்டி எம்மையும் மன்னிக்கவேண்டும். நிற்க; "சாதகர்" என்னும் நமது நண்பர் தாமெழுதிய ஓர் உபந்நியாசத்தைப் பற்பலவழுச் சொற்களால் நிறைப்பினர். அது விஷயத்தில் எமக்கோர் ஐயமுண்டு. "கவி என்பது கவிகளுக்குக் காமதேனு" என்று ஆன்றோர்வாக்கியத்தால் கவி என்பது பல பொருள்களையுங் கொடுப்பதுபோல இவர் எழுதும் சொற்களும் எல்லாப்பொருள்களையுங் கொடுக்குமென்றும் அவரது காரியம்போலும். யாம் நினைப்பது, இவருக்கு அப்பொருள் தரினும் மற்றவர்களுக்கு அப்பொருள் கொடாதென்பது திண்ணம். நிற்க; கதைகளைப்பற்றி "சாதகர்" என்பவர் எழுதியஉபந்நியாசத்திலகண்ட குற்றங்கள் ஸ்ரீசுந்தரராஜசாஸ்திரிகள் சீடரால் மறுக்கப்பட்டதென்பதைத் தாங்கள் அறிவீர்களே? உண்மையை விசாரிக்குந்தாங்களும் அதைச் சிறிது குற்றமுள்ளதென எழுதியதை யாம் கண்ணுற்றேம். அதுவிஷயத்தில் அச்சாதகர் என்பவருக்குத் தாமே சகாயமாயிருத்தலால, அதுவிஷயத்தைப் பற்றி எனது புத்தியிற் றோன்றியதை எழுதச்சிறிது அச்சமுண்டாகிறது. ஆயினும், தமதுஸ்நேகவலியால் எழுதத் துணிந்தோம். நமது நண்பர் "சாதக" ரெண்டவருள்ளம் இத்தகையதென்பது எமக்குப்புலப்படவில்லை. [௧] "ஆகாயத்தாமரை முயற்கோடு" என்பதைப்போல் "ராதை" என்றவளொருவள் பிறக்கவேயில்லையா? அல்லது [௨] பிறந்தும் அவளைக் கண்ணபிரான் மணம்புரிந்தது வாய்மையல்லவா? [௩] அம் மங்கையைக் கண்ணன் மணந்தும் அவளது சரித்திரம் யாவரும் பிரமாணமாக ஒப்புக்கொள்ளத்தக்க கிரந்தங்களில்லாமையால் பாபசரித்திரமுள்ளவளென்பதா? இவற்றுள் முதலிரண்டு சங்கைகள் செய்தல் ஞாயமன்று. எனின், தென்னாட்டில் விசேஷ வழக்கமில்லாவிடினும் வடநாடுகளில் பெரும்பாலும் அநேகர் வீடுகளில ராதாகிருஷ்ண

[illegible]

டடங்கள் பூஜைகளிலிருக்கின்றனவல்லவா? அதுவே அவளி தமொருவளிருந்ததற்கு முக்கிய சாட்சியாகும். இனி, அவள் பிறந்ததும் அவளைக் கண்ணன் புணர்ந்ததும் "வாய்மையல்லவென்பது யாங்ஙனமையுமட? "அச்சாதக,, மென்னும்பண்டிதர் மூன்றாவது ஆசங்கையை கைக்கொண்டிருப்பரெனின அதைப்பற்றியும சிறிது எழுதப்புகுவாம். அந்தோ! பாருமின்! நமதுநண்பர் சாதகரெனபவர் "வழுச்சொற்கள் நிரம்பிய கீதகோவிந்தம்,, எனறூர். இஃதென்ன விபரீதம! "சம்யோகம் விப்ரலம்பம்,, எனகிற இருவகையாய் நின்ற சிங்கார ரசத்தை முக்கியமாய் வைத்து இராதையை நாயகியாகவும் ஸ்ரீமத் கண்ணபிரானை நாயகனாகவும் அமைத்து சுலோகங்களுடன் கலந்த இருபத்துநான்கு அஷ்டபதிகளை ஜயதேவ ரென்னும் கவி எழுதியிருக்கிறூர். அதைக் கண்டு களித்த ஒவ்வொரு கவிகளும் அதன் அலங்காரங்களையும், அதன் பாகங்களையும காளிதாசனது காவியத்துடன் ஒப்பிடுகின்றூர்கள். அவ்வித காவியத்தை தூஷிப்பவர்க்கு யாது விடை பகருவோம். இனி அப்பிரயாணயான கிரந்தங்களில் அவளது சரித்திர மெழுதியதென்ன அவர் கூறுவதும் விசாரித்தால் நிற்காது. இப்பிரபந்தம் தமதாசாரத்திற்கு முக்கியபிரமாணமென அநேகமகாபாகவதர்கள் கைக்கொண்டிருக்கிறூர்கள். இனி அதை அப்பிரமாணமெனச்சொல்லவந்த நமது "சாதகர்,, என்னும் பண்டிதரின் திருவாக்குப் பிரமாணமாதல் யாங்ஙனமென்று யாமாராயந்தும் அதற்கு மூலப்பிரமாண மொன்றுங் கிடைக்கவில்லை. இனி சமஸ்த ஸ்மிருதிகள், இதிகாசம், புராணங்கள் மற்றையமுன்னோர் நல்வழிகள் இவைகளைக் கடந்து வேதங்களினும் மேலாயிருப்பதுபோல மெத்த ஆடம்பரத்துடன் வெளிவந்த எமதுநண்பர் திருவாக்குக்கும் பிரமாணமளிக்க வேண்டுமோ வென்று அவ்விடயத்தினின்றொழிந்தேன். இனி அவரைக்கேட்டதில் பயனென்னை? தாமே விடைகூறுமாறு விரும்புகின்றனன். இத்தேசத்தில் இப்பாகவதசாம்பிரதாயம் தழைத்தோங்கியதற்கு மூலகாரணமான 'சத்குருச்வாமிகள், அவதரித்தது தங்களுக்குப்புலப்படாதோ? அவர்கள் மருதாநல்லூரில் வசித்ததும், தென்னாட்டிற் கோர் பேரணியாய் விளங்கியதும், உலகம்புகழ உன்னதபதவியை யடைந்ததும், திருமகளைப்பழிக்கும் திருமேனியைக் கொண்டதும், பிரகஸ்பதியை வெல்லும் பிரசங்க வலிமையைப் பெற்றதும், தர்ம சாஸ்திரங்களைத் தழுவி நின்றதும், ப்ரம்மத்தியானத்தை சம்பூர்ணமாகப்பெற்றதும் மற்றவரைக் கண்டு இவர் சுகமுனிவரவதாரமோ வென ஐயமுற்றதும், அவர் வெங்கிடராமனெனப் பெயரை வகித்ததும், அண்டினவர் தொண்டேற்று அவரையாண்டதும், உயர்ந்தோருச்சரித்து மகிழப்பதம்பெற்றதும் அறியாதவர் யாவர்? அவர்கள் இடைவிடாது லக்ஷிமிநாதனைத் தியானித்துநிற்க, அவர்மாணுக்கருள் முதல்வராய்வந்த ஓர்பண்டிதர் யிருந்ததும் எல்லோருமறிவர். அவர்கள் இருவரும் செய்துகொண்ட சம்வாதத்தை சுகமுனியும் பரீக்ஷித் மகாராஜனும் செய்துகொண்ட விவாதமானது பாகவதம்போன்றதாக ஆன்றோர் வழங்குவது. அச்சத்குரு மூர்த்திகளே தமது சீடனுக்குப் பரீக்ஷித் எனப்பெயரிட்டார். 'அப்பரீட்சித்,என்னும்பண்டிதர் தமது

[illegible]

ஆசிரியர் வணக்கத்திற்காக ஓர் சுலோகம் எழுதியிருக்கிறார். ''[illegible]''॥ *********

இதன்பொருள், திருமகளைப் பழிக்குந் திருமேனியும் திருநீறணிந்த திருநெற்றியும், பகவன் நாமம்படிந்த பவழவாயும் ராதையுடன் கிருஷ்ணன், ராதையுடன் கண்ணன் கவர்ந்த திருவுளமும் பெற்ற வெங்கிடராம குருமணியை எப்பொழுதும் யாம் தொழுவேன் என்பது. இதனால் சற்குரு மூர்த்திகள் ராதையுடன் கண்ணனைத் தியானிப்பதாக வெளியாகின்றதல்லவா? அவரது திருவுள்ளத்தில் ருக்மணி, சத்தியபாமை முதலிய பெருமாட்டிகளைவிட்டு இராதையுடன் கண்ணன் எழுந்தருளியதற்குத் தக்க காரணமுணர்ப்பதில் எமது சிற்றறிவுஎட்டுமோ? இனி ஒருக்கால் அம்மகான் இராதையுடன் கண்ணனை வழிபட்டிருப்பினும், அவர் கொண்டபடி மற்றவரும் அவ்விதம் அனுட்டிக்கவேண்டியது அவசியம் யாதுளதென ஓர் வினாத்தோன்றிற்று. அதற்குத்தரமளிக்க யாம் இரசேந்துவோம். சிறிது சவனியுங்கள்; இந்நாட்டிலெங்கும் சஞ்சரித்துவரும் பாகவதர்கள் சம்பிரதாயத்திற்கு அவரே மூலாசாரியா. இனி அவர்மதத்தை அநுட்டித்தவர்கள் அவரால் ஆராதிக்கப்பட்ட இராதாகிருஷ்ண பெருமானுக்கு இராதாகல்யாண முதலியவற்றால் வழிபடுதல் சம்மதமாகவேயிருத்தல்வேண்டும். ''முன்னோர்கொண்டதைப் பின்னோர் கைக்கொள்ளவேண்டு'மென்பது உலக நீதியல்லவோ? வேதத்திலும் ''உனக்கு கர்மங்களிலும் ஆசாரங்களிலும் ஆசங்கை நிகழின்,, என்று தொடங்கிய வசனத்தால் இவ்வம்சம் புலப்படும். இதுவும் நிற்க; தாங்களெழுதிய குறிப்பில் வல்லபாசாரியர் என்று தொடங்கி ராதாகிருஷ்ணன் என்னும் பெயர் நூறு வருடங்களுக்கு முன் இல்லையெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்கருத்து யாது? நூறே வருடங்களுக்குமுன் அப்பெயர் இங்கு இல்லையென்றால், அநேகவருடங்களுக்கு முன்னவதரித்த லீலாசுகர் எழுதிய சுலோகங்கள் ராதாகிருஷ்ண பதமமையப் பெற்றுளதும் பொய்யோ? அவர்கூறிய சுலோகங்கள் கர்ணாமிருதமெனப் பெயர்பெற்றதும் முதியோர் அவற்றைக் கொண்டாடியதும் அறிந்திலீரோ? அதே சுலோகங்கள் சநத்குமார சம்ஹிதையிற் கண்ட மந்திரங்களின் தியான சுலோகங்களாகவே நிற்கின்றன.

அக்கர்ணாமிர்த புத்தகத்தில் ராதையென்னும் பதத் தொடர்புடைய இச்சுலோகங்கள் பலவுள. உதாரணமாக, ,,[illegible]॥***** என்றுதொடங்கிய பலசுலோகங்கள் உள. ஆதலால் இவ்வித சம்பிரதாயம் இத்தேசத்தில் வெகுகாலமாயுள்ளதேயொழிய நூதனமல்ல. இவ்விதம் பெரியோர்களின் கொள்கை.

[illegible]

[illegible]

[illegible]

ஏதோ என சிற்றறிவுக்கெட்டியதை எழுதினேன். சொன்னதைச் சொல்வதில் பயனென்னை? ப்ரம்மகைவர்த்த புராணத்தில் ராதாகல்யாணத்தைப்பற்றி விரிவாயிருப்பதாகக் கேள்வி; நான் பார்த்தவனில்லை; விசாரித்துக் கூடிய சீக்கிரத்தில் எழுதத்துணிவேன். இனி சர்வபுராணங்களினுண்மைகளை அறிந்தவர்களுக்கு இதுமட்டில் புலப்படாததாக யான் எண்ணவில்லை. நமது நண்பரர்கிய சாதகர், பாகவதர்கள் கல்விப்பயிற்சி அற்றவர்களென்றும், சீர்திருத்தஞ் செய்யவேண்டுமென்றும் சொல்லியதைப் பிறகு விசாரிப்பாம்.

இங்ஙனம்
குழிமணி நீலகண்டசாஸ்திரிகள் மாணுக்கர்
துரைசாமிசாஸ்திரி

குறிப்பு.

ஐயா, துரைசாமிசாஸ்திரிகாள்! கருணைகூர்ந்து எமதுவிண்ணப் பத்திற்குச் சற்று செவிசாய்மின;

தம்மால் எழுதப்பட்டும் மேலே வெளியிடப்பட்டுமுள்ள கடிதத்தைப்பற்றிச் சிறிதெழுதவேண்டியது அவசியமாயிற்று. எமக்கு திருமலைசாஸ்திரிகளின் கடிதத்திலாவது, சுந்தரராஜாசாரியர் மாணுக்கரின் கடிதத்திலாவது குற்றங்களைத் திரட்டி எடுத்துக்காட்டவேண்டுமென்கிற எண்ணமிருப்பதாகத் தாங்கள் தீட்டியதுயாதுபற்றியோ தெரிந்திலன்; எமதுகொள்கை இத்தன்மைத்தென நம் பத்திரிசாநேயர்களறிந்திருப்பினும், மீண்டும் அவ்விஷயத்தை எடுத்துபகரிப்பதாயிற்று.

வடநாடுகளில் பம்பாய் என்னும் நகரத்தில், "கிருஷ்ணஜன்மகண்டம்" என்றச்சிட்டு வெளியாயிருக்கும் புத்தகத்தை யாம் வெகுகாலமாயறிவோம். இத்தேசத்தில் ஸ்ரீமத் சத்குருசுவாமிகளவர்களை மூலாசாரியராகக் கொண்டு இக்காலத்துப் பாகவதசம்பிரதாயம் ஏற்பட்டு வழங்குவதையும் யாமறிசவிஷயமே. இனி அதுவிஷயமாய் நம் சுதேச பண்டிதர்கள் கொண்ட அபிப்பிராயங்களை அவர்களுடன் பன்முறை கலந்து எமது சிற்றறிவிலிருத்தியிருக்கின்றோம். இவைகளால் யாம்கொண்ட முடிகிப அபிப்பிராயம் யாதெனின், எவ்விதத்திலும் நமது முன்னோர் குலதனமாகக் கையாண்டுவந்த வேத சாஸ்திரத்தின் வரம்புமீறி ஒன்றும் செய்யற்பாலதன்றே. நம்முன்னோர்கள் "ஸ்மிருதிகளிலாவது, புராணங்களிலாவது வேதங்களுடன் முரணும் சொற்றொடர்பு இருக்குமேல், அதுதாக் திரிகமென்று வைதிகர்கள் கொள்ளவேண்டும்" என்று எழுதியிருக்கிறார். யாம் அத்தியயனம் செய்துவரும் வேதங்களுக்கு விரோதமாய் புராணவசனங்களேனும் தர்மசாஸ்திரவசனங்களேனும் பற்ற எவ்விதஆப்த வசனங்களேனுமிருப்பின் அவைகளையாம் அநுஷ்டித்தல் உசிதமன்று. இவ்விஷயத்தைப் பற்றி வேதங்களைப் பொருள்படுத்தும் பெருகைருவியாய் நின்றுள மீமாஞ்ச சாஸ்திரத்தில் ஓர் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு காண்க:—

அங்கு தர்மசாஸ்திரங்களைப்பற்றி எழுதுமிடத்து "வேதங்களைக்கண்டு அவற்றின் பொருள்களையே மாமுனிவர் ஸ்மிருதிகளாகச் செய்தார்கள்" என்றிருத்தலால் "ஸ்மிருதிகளெல்லாம்

[illegible]

[illegible]

வேதத்தை முதனூலாகக்கொண்டன. ஆயின, வேதமும ஸ்மிருதியும் சமானப்பிரமாணம்'' என்று ஓர் ஆக்ஷேபஞ்செய்து ''யாம்மேோபடித்தவரும வேதங்களுக்கு விரோதமான தர்மசாஸ்திர வசனங்கள் அப்பிரமாணமென்றும், இறந்துபோன வேதங்களை மூலமாய்க்கொள்வது இறந்தவனை சாட்சியம் இடுவதுபோல் பயன்றாது'' எனறு சித்தாந்தமும் இருக்கிறது. அவ்வழியை யாம் மேற்கொளாகக் கொண்டு வைதிக மதத்தில் குற்றங்கூறுந கடிதங்களையும அவர்க ளபிப்பிராயத்தையும் வெளியிடுவோருக்கு ருடட. முக்கியமாய் எமது அபிப்பிராயமவைதிகசம்பிரதாயத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியதென்பது. அதற்கு விரோதமாய் எழுதும்விஷயங்களை நலமொழிகளால் மறுத்துத் திருத்துவோம். இனி எடுத்த விஷயத்தில் புகுவோமாக.

ஐயா, கண்ணபிரானது மேன்மைப் பன்முறை எடுத்துக் கூறுவது எமக்கு நூதனமுமல்ல, அதைதிகமும் அல்ல. ஆயினும் கோபாலதாபிநீ முதலிய உபநிடதங்களைச் சிறிது கவனியுமின்! அவைகளுள் ஸ்ரீ ருக்மணிதேவியை மூலப்பிரகிருதி என்றும், ஸ்ரீமந் நாராயணனது திவ்வியசக்தியென்றும், வித்தையென்றும, அவித்தையென்றும், மாயையென்றும், ஸ்ரீமந்நாராயணனது திவ்விய குணங்களென்றும் இன்னும் பற்பலவிதமாக எடுத்துவிரித்து விளககியிருக்கின்றது. இங்ஙனமிருக்க, இக் கிருஷ்டின ஜன்மகண்டமென்னு மோர் புத்தகம் அவ்வேத விருத்தமான பொருளைக் காட்டுகின்றது. அஃது ஆதி நாராயணனது திவ்விய சக்தி யென்றே காட்டுகின்றது. இத் தகைமையான வசனங்கள் வைதிகர்கள் ஒப்புவார்களோ? சொல்லுமின்! பகவான் ஸ்ரீராமனைப்புகழுமிடத்து, உலோக மாதாவாகிய சீதாதேவிபெறும் பெரும்புகழை, கண்ணனைத்துதிக்குமிடத்து, ஸ்ரீருக்மணி தேவியல்லவோபெறவேண்டும்? தாம்குறிப்பிட்ட புத்தகமோ! ராதையை விட்டுணு வித்தியாரூபமாக எடுத்துரைக்கின்றதே. அப்புத்தகத்தைப் படித்துப் பாருமின்! அப் புத்தகத்திலடங்கிய கிரந்தங்களைக்கணக்கிடுங்கள். ப்ரம்மவைவர்த்த புராணத்தின் கிரந்தத்தொகை இவ்வளவென்பதை ஸ்ரீபாகவதம்முதலியவைகளாலறியுங்கள்; இரண்டையுமோர்சமயம் ஒத்துப் பார்ப்பின் உங்கட்கே உண்மை வெளிப்படும்; விதண்டாவாதத்திற் பயன் யாதுமில்லை! அது புராணமாயினும் வேதத்திற்கு விரோதமானபொருளைக்கூறுகின்றதே; அதைப் புராணமெனத் தாபிப்பது யாங்ஙனம்? இவ்வேதபுராண ஒற்றுமையைத் தீட்டிககாட்ட வேண்டுவது தங்கள் தலைச்சுமை; மீண்டும் யாமுன் வினாக்கவிஷயங்களைச்சற்றுக் கவனியுங்கள்; ருக்மணி சத்தியபாமைகளுடன் பலதேவாலயங்களில் கண்ணன் அர்ச்சாவதாரமாகயெழுந்தருளியிருப்பதை யாம்பார்க்கின்றோமல்லவா? இவ்விதமாக ராதையுடன் கண்ணனைத் தெரிசித்ததுண்டோ? எந்த கோபால மந்திரத்திரியானத்திலாவது ராதையைச் சேர்த்திருக்கின்றதா? அல்லது எந்த எந்திரத்திலாவதுண்டா? எந்த தந்திரத்திலாவது ருக்மணி முதலியவர்களுக்கு இருப்பது போல இவ்விராதைக்குச் சிறப்பமைந்திருக்கின்றதா? கிராம தேவதை முதலிய சொற்ப தேவதைகளுக்கும் மந்திரம், தந்திரம், எந்திரம், சிற்பம், ஆலயங்கள் இவைகளிருக்

[illegible]

கின்றனவே; கிருஷ்ண ஜன்ம கண்ட மென்னும் புத்தகத்தில் சொல்லியபடி, மகாபெருமை பொருந்திய ராதை என்பவளுக்கு இத்தேசத்திலேனும், மற்றைத்தேசத்திலேனும், மற்றைப் புராணத்திலேனும் உண்டோ? இனி ஜயதேவகவி தற்காலத்தார் சார்வபௌமரென்றும், ஓர் மகாத்மாவென்றும், லீலாசுகர், காளிதாஸன் முதலிய மகாகவிகளைப்போன்றவரென்றும் என்பதை யொப்ப எமக்கு யாதுந் தடை யிலது. கவிகள், நாயகிகளையும் நாயகர்களையும் உற்பத்திசெய்தேனும் இனிமையாய்க் காவியங்களை யியற்றுவது அவர்களுக்கியல்பே. காளிதாஸன் எழுதியதால் ''மாளவிகாக்னிமித்திரம், மேகதூதம்,, இவைகளுண்மைக்கதைகளென பெறப்படுமோ? ஸ்ரீபகவான் வால்மீகி மகாமுனிவரைத் தொட்டு இக்காலம் வரையிலுள்ள கவிகள் கதைகளை உற்பத்தி செய்தல இயற்கை எனக் கொண்டிருக்கிறார்கள். அதுகொண்டல்லவா காவிய விலக்கணங்களிலும் பிரக்யாதம் (உண்மைக் கதை) உத்பாத்தியம் (கற்பிதம்) மிச்ரம் (சிலஉண்மை சிலகற்பிதம்) எனமூவகை பகுபாடு காவியங்களுண்டென்பார். இனி பகவானை வழிபடுபவர்களுக்கு சங்கீதம், தாளம், லயம் இதுகள்சேர்ந்தால் பெருங்களிப்புண்டாகு மென்றெண்ணி ஈசசாஸ்திரங்களைக் கசடறக் கற்றுணர்ந்த ஜயதேவ கவிமணி கீதகோவிந்தமென்னும சாஸ்திரத்தை இயற்றினரென்பதே உண்மையென்று அப்புத்தகத்தின் முகவுரையாற்றானே படித்தறிந்துதெளிக. மேலும் இத்தேசத்தில் எமது கண்ணுதலார் கழலிணைகளைக்கனவிலும் மறவாது தொண்டுபுரிந்து வீடுபெற்றஉண்மைநாயன்மார்கள் அறுபத்துமூவர்கள் இருந்ததைநீவிர் கேட்டறிந்திலரோ! இங்ஙனமே ஸ்ரீபாண்டுரங்கக்ஷேத்திரத்தில் ஸ்ரீஜயதேவர் முதலிய பலபாகவதர் அச்சுதனடிமலர் மறவாதுபேரறிவுச்செல்வம் பெற்றவரெனப்புகலப்படுகின்றது. அவர்கள் அப்பரமனிடம் வைத்தபேரன்பின் பெருக்கத்தால் பரமேசுவரனது கட்டளையாகிய வேதாகம புராண இதிகாசங்களில்கண்ட விதிவிலக்குகளைக் கடந்து நடந்திருப்பார்கள். அவ்வழக்குகளெல்லாம் அவர்களிடங்குற்றமாகாதிருப்பினும், யாம் அதைக்கைக்கொள்வது எவ்விதத்திலும் உசிதமல்ல; இனி அவைகளைக் கைக்கோள்ளில் நமது மதத்தின் வரை அறுமென்பதிற்றடையில்லை; இனி வல்லபாசாரியாரவர்கள் சித்தாந்தத்தைக்கற்றுணராத தம்போலியர் முன் அம்மதத்தின் உண்மைகளை எடுத்துரைப்பின் பரிகாசம் செய்வதாய் முடியு மாதலால் யாம் அவ் விஷயத்தை விட் டொழிந்தோம். அவ் விஷயத்தில் நீவிர்க்கு ஆசங்கையிருப்பின் வல்லபாசாரியரியற்றிய புஷ்டிப்பிரவாகமரியாதையில் காண்க. அப்புத்தகத்தில் பெண்பாலராய்ப் பிறவாதவர் வீடு பெறாரென்றனர்.

இன்னுமநேகமாய் வழங்கக்கூடாத——————

முதலிய வசனங்களை அம்மதப்புத்தகத்தில் பார்க்கலாம். இவைகளுக்கெல்லாம் முக்கியபிரமாணம் அக்கிருஷ்ண ஜன்மகண்டமென்னும் புத்தகமேயாம். அம் மதாசாரியர்களின் றொடர்பில் ஸ்ரீஜயதேவரும் கர்ணாமிர்தத்தை யியற்றிய லீலாசுகரும் ஒருவரோ. ஆதலால், தாமெழுதிய விஷயமெல்லாம் ஓர் சார்பானப்போலியாய் முடிந்ததெனக் கண்டொழிக. இவ்விதமெழுதியதால் எமது நடுவு நிலைமை எவ்விதங்குன்றும்?

[illegible]

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

(௧) [illegible]

(௨) [illegible]

(௩) [illegible]

யாம் பிரமாணமொன்றையே கொள்வோம். எமக்கு ராதை சத்துருவல்ல; அங்கு எமக்குத் த்வேஷமுமில்லை! எம்மிருவினைகளுக்கேற்ப பயனளிக்கும் பரமனை யாம் வழிபடல், எமக்கு நன்று. ஆதலால் யாமெழுதியதை நன்குணர்ந்து குற்றங்களையகற்றிக் குணங்களைக் கைக்கொண்டு வாசகர்கள் ராதையை வழிபடுவதற்குக் காரணங்களை எழுதுங்கள் கூனி முதலிய வேசிப்பெண்களின் கதைகளை மறவாது எழுதிவைத்த பாகவதம் இவ்விராதையை மறந்ததென்னை? விரிவாய் அறியவிரும்புவோர் மற்றோரிடத்திற்காண்க.

ப. ர.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:— சர்வதாரி௵ ஆடி௴ ௨௰

மறுபிறப்பு.

ஐயா, இவ்விஷயத்தைப்பற்றி எழுதுவதாய் யாம் முன்னரே வெளியிட்டிருந்தோம்; ஆன்மாவும் சரீரமும் என்னும் குடத்தின்கீழ் யாமெழுதிய உபந்நியாசத்தில் பற்பல குற்றங்களிருப்பதாய் நாத்திகர்களுள் சிலரெழுதியதை மறுப்பதில் யாம் தலையிட்டோம். ஆதலால் சிறிதுகாலஞ்சென்று இஃது பின் வரலாயிற்று. ஐயா பாரதசகோதரர்களே! மேன்மைதாங்கிய நம்மாரிய மதத்திற்கு மறுபிறப்புண்டென்பதே மூலம்; இஃது நமது வேதத்திற்றானே இருவினைப்பயனாக எடுத்து விளக்கப்பட்டது. இவ்விஷயத்தைப் பற்றி ஆக்ஷேபிப்பவர்கள் சில நாத்திகர்களும் மஹம்மதியர்களும் கிறிஸ்தவர்களுமே; இவ்விஷயத்தை, வேதபாக்கியரான பௌத்தர்களும் ஒப்பியிருக்கிறார்கள். சாங்கியர்கள் முதலிய வைதிகநாத்திகர்களும் ஒப்பியவிஷயமே. இவ்விஷயத்தில் வேண்டிய பலகாரணங்களைப்பற்றி அநேகர் பற்பல விதமாய் எழுதியிருக்கிறார்கள்; அவைகளைச் சுருக்கிக் காட்டி மேற்றிசை நாத்திகர்கள் முதலிய பலர்கூறும் ஆக்ஷேபங்களையுமெடுத்து விரித்து அவர் வழி கொண்டே மறுத்து நமது கொள்கையை நிலைநாட்டுவாம். இவ்விஷயத்தைப்பற்றி நாத்திகர் எடுத்துக்காட்டும் குற்றங்களிவை:—

௧- இவ்வுலகம் தற்செயலாற்றான் அல்லது இயற்கையாற்றான் மாறி மாறிவருந்தன்மையுளதாதலால், மறுபடி ஓர் சரீரம் இவ்விதம் உண்டாகுமென்பதற்குத் தகுந்தகாரணமேது:—

௨- ஆன்மா என்பது சரீரத்தில் வேறான பொருளல்ல; அறிவுத்தன்மை மூளையினதே.

௩- உலகம் பலமாதிரி ஆவதும், தேசம், காலம், சரீரம், ஆகாரம் இவற்றின் வேறுபாட்டாற்றான்.

௪- மறுபிறப்பு இருப்பதாய் பிரத்தியக்ஷமாய் அநுபவித்தவன் ஒருவனுமிருந்திலன்.

௫- இனி முன்பிறப்பு இருப்பது உண்மையாயின் அதனை யாம் கண்டது ஏதேனும் நினைக்கப்பட்டதோ? அவ்விதமனுபவமுமில்லையே.

(௪) நாஸ்திகஸ்ய பூர்வபக்ஷ: ஜந்மாந்தரவாதே

(௫) யதிஸ்யாத் தத்ராநுமாநம் கிம்? தேஷாம் ஸம்ஸ்காராணாம் ஸ்மரணம் ஜந்மாந்தரீயம் ஸம்பவேத். தத்ராநுமாநம் உபபத்தே.

(௬) புண்யபாபயோ: ஜகத்ஸம்பந்தித்வாத் ஸாதனம் அபாரமார்த்திகம் ஜந்மாந்தரமஸித்தி:.

(௭) ஜந்மமரணாதயோ விகாரா: ஶரீரநிஷ்டா: வர்த்தமானஶரீரஸ்ய தஸ்யைவ ஶரீரஸ்ய கதம் ஸம்பவேத்?

(௮) யதிஸ்யாத் ஜந்மாந்தரம் தத்கஸ்ய ஶரீரஸ்ய ஸம்பவ:?

(௯) கிம் தத்ர ப்ரமாணம்!

(௧௦) கிம் ஜ்ஞாநினாம் நிவ்ருத்தி: ஸ்வபாவஸித்தஸ்ய?

(௧௧) ப்ராக்தநோத்தரகாலயோ: ஶரீராத் ஜீவஸ்ய ஸத்பாவே கிம் ப்ரமாணம்? இதி

கிம் க்ரைஸ்தவாநாம் பக்ஷ: ஜீவா: ஸ்வபாவாத் ஏவ ஈஶ்வரஸ்ருஷ்டா: ஜீவாநாம் ஶரீராணாம் ச ஸ்ருஷ்டி: ஈஶ்வரேச்சயா ஶரீரேண ஸஹ ஜந்மாந்தரம் நாஸ்தி க்ரைஸ்தவதர்மஶாஸ்த்ரோக்த விதிநா வர்த்தமாநோ விசாரணதிநே ஈஶ்வராநுக்ரஹாத் மோக்ஷம் ப்ராப்நோதி. அதஸ்ததிதரோ நரகம் இதி.

அத்ர நாஸ்திகபக்ஷ: நாஸ்திகபக்ஷேண ஸஹ ஸமாநோ க்ரைஸ்தவாநாம் இதி தத்ராபி அத்ர தேஷாம் ஸமாதாநம் ஸம்பவதி யுக்தயா தேஷாம் நிராகரணம் ஸம்பவதி ப்ரயோஜநம் தத்ராவயோ:!

(௧) நாஸ்திகபக்ஷே ஸர்வம் காரணம் ஸ்வபாவ ஏவ ஜகத: ஸ்வபாவஸித்தத்வாத் ஜந்மாந்தரஸ்ய கா ஸித்தி:? ஸ்வபாவவாதிந: யத்ருச்சாவாதிநஶ்ச த்விவிதா: நாஸ்திகா: ஜந்மாந்தரநிஷேதகா: தேஷாம் ஶரீராதிரிக்த ஆத்மா ந ஸித்த: ஶரீரஸ்ய ப்ரத்யக்ஷேண விநாஶ: ஸித்த: ஜந்மாந்தரம் ந ஸம்பவதி யத்ருச்சயா புந: ஶரீரஸ்ய ஸம்பவ: இதி. தத்ர நிராகரணம்.

சூ- புண்ணியம் பாபம் என்பன உலகக் கட்டுப்பாடாகை யால், அசத்தென மறுபிறப்பு யேற்படாது.

எ- பிறப்பு இறப்பு இரண்டும் இச்சரீரத் திற்கே உளதாத லால் இறந்த சரீரம் பற்றெக்காலத்தும் எவ்வாற்றானும் இவ்வகை யமையப்பெறுதென்க.

அ- மறுபிறப்பு உண்டெனில், யாம் காணும் சரீரவுறுப்பு களில் மறுபடியும் பிறக்கின்ற வம்சம் யாது?

கூ- மறுபிறப்புண்டெனத் துணிதற்கு முக்கிய பிரமாண ம் எவை?

௧௰- அஃது ஜீவனுக்கியற்கையாயின், ஞானிகளுக்கு மறு பிறப்பு அற்றுப்போவதற்குக் காரணம் யாது?

௧௧- இச்சரீரத்திற்கு முன்னும் பின்னும் ஆன்மாவிருந்தத ற்கு அறிபத்தக்க யுக்திகளுள தாவென்பன.

இவ்விஷயத்தில் கிறிஸ்தவர் புரியும் வாதங்களாவன:— தேவன் இயற்கையாற்றானே மூலகாரணமாக ஒன்றையுங் கொள்ளாது உலகத்தைப் பலவாறாக உண்டாக்கினர். அப் பராபரனே இவ்வுலகின் கண்ணுள்ள பற்பல வித சரீரங்களை யும் உயிர்களையும் சிருட்டித்தார். இவைகளுக்கு வேறு சரீ ரத்தொடர்பு இல்லை. இச்சரீரத்திற்றானே நின்று விவிலிய நூ லிற் கூறிய விதி வழுவாது நடப்பவன் விசாரணை தினத்தில் பராபரனுக்கு எதிர் நின்று அவருடைய திருவாக்கின்படி மோ க்ஷத்தைப் பெறுவான். அவ்வாறு இல்லாதவன் எரிநரகத்தி ல் வீழ்வான். ஆதலால், முன் நாத்திகர் கூறிய காரணங்களில் ஒன் றிரண்டு, மூன்று, ஏழு இவ்விலக்க கேள்விகள் தவிர மற்றவை கள் ஏகச்சம்மதமே. இவ்விஷயங்களில் நாத்திகர் ஆக்ஷே பங்களுக்கு யாம் சமாதானமளித்தால் அதுகொண்டே இக் கிறிஸ்தவர்களும் மறுக்கப்படுவாராதலின், இவர்களுக்கெனவே று சமாதானங்கூறவேண்டிய அவசியம் நேரிடவில்லை. அந் நாத்திகர் கேள்விகளின் உட்கருத்தை நன்றாகவிளக்கி அவைக ளுக்குத் தக்கவிடையளிப்பாம். அவற்றுள் முதல் கேள்வியின்க ருத்தையும் மறுப்பையும் அடியிற்காண்க.

௧- இவ்வுலகம் தற்செயலாற்றான் அல்லது இயற்கையாற் றான் மாறி மாறி வருந்தன்மையுளதாதலால், மறுபடி ஓர் சரீரமுண்டாகுமென்பதற்குத் தகுந்த காரணம் ஏது என்பது முதற்கேள்வி. இக்கேள்வியின் கருத்து; உலகத்தில் மறுபிறப் பில்லையென்று சாதிக்கும் நாத்திகர்கள் இருதிறத்தவர்கள்; அவர்களுள் இயற்கையாற்றான் உலகம் உண்டாவதெனச் சொ ல்பவர் சிலரும் (Naturalist), தற்செயலானுண்டாவதென்பது சிலருமே. இவ்விருதிறத்தவரும் சோதித்தமட்டில், சரீரவுறு ப்புகளின் வேறாய் ஆன்மாவென்றும் பொருளையறிந்தாரில்லை. அவ்வித ஆன்மப்பொருள் இருப்பதும் அவருக்குச் சம்சயமே. சரீரமோ! பிரத்தியட்சமாக அழிவதென்பது எல்லோருமறி ந்த விஷயமே. அது மறுபிறப்படையுமென்பது எவ்வாற் றானுமமையாது. இவ்விதமமைப்பு இச்சரீரத்திற்கு மறுபடி யுமுண்டாகாது. இவ்வுலகமே தற்செயலால் காலந்தோறும் மாறி வருவதால் ஒருகால் கண்ட அமைப்பு மீண்டுங் காணு மென்பது. இதை இவ்விதங்கூறி மறுக்க முக்கியமான காரண மொன்றுமென்பதிற்றடையில்லை. அஃதியாதெனின், முன் னரே அதாவது முதற்பக்கம் ௬-ஆவது பத்திரிகை தொடங்

[illegible]

[illegible]

[illegible]

ஸூசநம்.

ஸ்ரீராமாயணம்

[illegible]

கிசில பத்திரிகைகளாயில் "ஆன்மாவும் சரீரமும்" என்கிற மகுடத்தின்கீழ் யாமொரு உபந்நியாசத்தை எழுதியிருக்கின்றோம். அவ் வுபந்நியாசத்தில் சரீரவுறுப்புக்களின் வேறாய் ஆன்மாவென்றோர் பொருளுண்டென்று விளக்கினோம். அதற்குமுன் மூன்றாம்பத்திரிகை துவக்கி எழுதி வந்த உபந்நியாசத்தில் அறியுந்தன்மை மனமென்னுந்தனிப்பொருள் முதலியவற்றிற்கேயென்றும் பற்பல காரணங்களால் காட்டினோம். பிறகு அவ்விஷயத்தில் நாத்திகர்கள் ஆக்ஷேபித்த பலஆக்ஷேபங்களை மறுத்து ஆறுமாதகாலம் வரையில் அவர்களுடன் வாது புரிந்து நமது கொள்கை நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. அவ் வுபந்நியாசத்திற்றானே ஆன்மாவென்பது ஓர் அணுவென்றும் பொருளென்றும் முடித்திருக்கோமாதலால் அஃதை அங்குதானே காண்க. அணுவாயுள்ள ஓர் வத்து பெரிதாகி வரயாம் காணின், அவ்விடம் பலவேறு அணுக்கள் வந்து சேர்ந்ததாகவே ஊகிக்கவேண்டும். அதற்குக் காரணம் அவ்வப்பொருள்களின்கண்ணமைந்திருக்கும் தம்மினத்தை இபக்குந்தன்மையே. அணுவாகியஜீவனென்னும் ஓர்பொருள் அணுவாய்த்தமது இயற்கையறிவு விளக்கும் முக்கிய கருவியாயஇச்சரீரத்திலடங்கி அசையதிடடித்துநிற்றது உசிதமே. ஆன்மா என்னும் ஓர் அணு இச்சரீரத்தில்நிற்பதாற்றான் கற்கட்டைகளைப் போன்றஇச்சரீரம் அசைகின்றது. இவ்வான்மாவென்பது அணுவாதலால் அஃது அழியாதெக்காலமுமிருக்கவேண்டுமல்லவா? அதற்கு ஓர் சரீரத்தை யடைந்து நிற்றலியற்கையாதலால் அநாதியிற்றானே சரீரசம்பந்தமுமிருத்தல் அத்தியாவசியம். இனி "ஆன்மா நித்தியன்; அவன் ஒருபொருளே; சரீரத்தை நடாத்தும் வலிமை பெற்றவனே; அவன் இச் சரீரத்தை முதலிலடைந்தான்; இச் சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரத்தை இனிப் பெறான், என்று துணிந்தெழுவதில் காரணம் யாதுமில்லை. ஆதலால், ஆன்மாவின் இயற்கை இலக்கணமின்னதென்றறிந்தவர்களுக்கு மறுபிறப்பு என்பது ஐயந்திரிபு அறத்தெற்றெனப்புலப்படுமாக. அவ்வான்மா சரீர வுறுப்புக்களிற் சேராதவனாயினும், சரீரத்தை எக்காலத்திலும் அவாவுந்தன்மையுள்ளவனாதலால் இச்சரீரத்தைவிடினும், மற்றோர்சரீரத்தைப் பெறாமல் நிற்பானென்பது எக்காரணத்தாலோ? மறுப்பவர் அது அமையாதென்பதற்குக் காரணம் யாதுங்கூறினாரில்லை. மறுபிறப் பென்றெடுத்தோதுவது "இச் சரீரமீண்டுமிம்மாதிரிபெறு,,மென்னுங்கருத்தாலல்லவே! ஆன்மா மற்றோர் சரீரத்தைப் பெறுமென்னுங்கருத்தாலல்லவோ? சரீரத்தின் தன்மையான பிறப்பிறப்புகளை ஆன்மாவிலாரோபித்து வழங்குவதே வழக்கம். சரீரத்திலுள்ள ஏனையதொழில்களையும ஆன்மாவிடஞ்சேர்த்து விவகரித்தலுமுண்டு. யாம அசையாது ஓர்வண்டியின்மீது உட்கார்ந்திருக்கும்பொழுது அவ்வண்டி செல்லின், அப்பொழுது யாம்போகின்றோமென்று விவகரிக்கின்றோமல்லவா? ஆதலால். ஆன்மாவினது இயற்கை இலக்கணமறியாதார் மறுபிறப்பிலலை யென்றாரெனக. அந்நாத்திகரும் அணுக்களை அநாதியென்றொப்பவேண்டும்.

விரிவாய்ப்பின்வரும்.

(க) [illegible]
(உ) [illegible]
(ரு) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

குறிப்பு.

இராமாயணம், இடமில்லாமையால் அடுத்தமுறை வரும்.

1. மதவிஷயமான ஓர் விநோத விவாதம்.
2- பத்திராதிபர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஓர்விண்ணப்பம்
3- துரைசாமிசாஸ்திரிகளவர்களது பத்திரிகை.

இவைகளையும் மறுபத்திரிகையில் பிரசுரிப்போம்.

கம்சவத சம்புகாவியம்-

ஐயா, திருவனந்தபுரத்தில் ஸ்ரீமத்கோளவன்மனென்னும் பெரும்புகழ்தாங்கிய பெயர்பெற்ற கவிமணியாகிய அரசர்மணிவாழ்ந்திருப்பதை எல்லோருமறிந்திருப்பீர்களல்லவா? அவரியற்றிய அநேக காவியங்கள் இப்பரதகண்டத்தில் உலாவுகின்றன. இப்பொழுது தற்காலம் வெகு பெருமைதாங்கிய கம்சவதசம்புகாவிய[illegible] ஒருபெரியபுத்தகம், அவரதுபெயர்மணியைசூட்டி வெளிவந்தது. அதை யாம்கண்ணுறறு மிகமகிழ்ச்சியடைந்தோம். அநேககாவிய வித்துவான்கள் புகழாநின்ற இப்புத்தகத்தை யாம் மறுபடி பெருமையுள்ளதாக எடுத்துக்காட்ட வேண்டியது அநாவசியம்; இப்புத்தகம் திருநெல்வேலி கைலசபுரத்தில் வசிக்கும் ப்ராம்மஸ்ரீ கிருஷ்ணசுவாமி அய்யரென்னுமோர் சனவானால் நாகரவெழுத்தா லச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது; இதன் விலை அணு ௧. உலகத்தில் ரசிகர்களாயுள்ளவர்கள் வலுவில் தம்மிடம் வந்து விளையாடிநிற்கும் காப்பியம் என்னும் மங்கையைக் கைநழுவ விடாது காப்பார்களெனக் கருதுகிறோம். இனி அப்புத்தகத்திற்கு ஸ்ரீமான சந்தரராஜாசாரியரயர்கள் செய்த ஓர் சிற்றுரையுமகலங்கிருப்பது ஓர் பெரியசாதகம். சுபம்.

பால நீதி

[illegible]

க0அ- [illegible]
க0கூ- [illegible]
கக0- [illegible]
ககக- [illegible]
ககஉ- [illegible]
ககரு- [illegible]
ககச- [illegible]
ககரு [illegible]
ககசா [illegible]
ககஎ- [illegible]

[illegible]

[illegible]

—:(*):—

க- [illegible]
உ- [illegible]

௱அ லீலையில்மனதை லேசில்விடாதே.
௱கூ லோகத்தார்கள் லோபியைப்பழிப்பர்.
ககய லௌகிகத்தால் வைதிகம்விடேல்.
ககக வாத்துசகுமிஞ்சும் விரயத்துக்கஞ்சு.
ககஉ வார்த்தைகயத்தால் வலியவர்மகிவர்.
ககரு விநோதம்பேசி விரோதம்விளையேல்.
ககச வீரியங்கூறின் வைரிகள்பெருகிறவர்.
ககரு வெட்கங்கெடுக்கும் வேலையில்தலையிடேல்.
ககசா வேதநூலில் விசுவாசங்கொள்.
ககஎ வைராக்கியம்வைத்தரும்மோக்ஷம்மெய்.

(முதற்பாகம் முற்றும்.)

A- கிருஷ்ணசாமிஅய்யர்.

௩- [illegible]
௪- [illegible]
௫- [illegible]
௬- [illegible]
௭- [illegible]
௮- [illegible]
௯- [illegible]
௧௦- [illegible]
௧௧- [illegible]
௧௨- [illegible]
௧௩- [illegible]
௧௪ [illegible]
௧௫ [illegible]
௧௬- [illegible]
௧௭- [illegible]
௧௮- [illegible]
௧௯- [illegible]
௨௦- [illegible]
௨௧- [illegible]
௨௨- [illegible]
௨௩- [illegible]
௨௪- [illegible]
௨௫- [illegible]
௨௬- [illegible]
௨௭- [illegible]
௨௮ [illegible]
௨௯- [illegible]
௩௦- [illegible]
௩௧- [illegible]
௩௨ [illegible]
௩௩- [illegible]
௩௪- [illegible]
௩௫- [illegible]
௩௬. [illegible]
௩௭ [illegible]
௩௮- [illegible]
௩௯ [illegible]
௪௦- [illegible]

2-ம்பாகம்

௧ அரைப்படிப்பு அகந்தைக்கிருப்பு.
௨ ஆதாரவின்றி வாதாடாதே.
௩ இப்பதைநினைத்து எஸலைஸியுயர்த்து.
௪ ஈந்துணுச்செல்வம் இருந்தென்னபலன்.
௫ உள்ளதைக்கொண்டு உள்ளந்திருத்திகொள்.
௬ ஊக்கஞ்செலுத்தி யுழைப்பதுபுத்தி.
௭ என்னகொடுப்பினும் இன்சொல்லொடுகொடு.
௮ ஏற்றவேலையை நேர்த்தியாய்ச்செய்.
௯ ஐசுவரியம் அநித்தியபோகம்.
௰ ஒருதொழிலாவது ஊர்ச்சிதப்படுத்து.
௧௧ ஓரஞ்சொல்பவன் சோரன்போன்றவன்.
௧௨ ஔஷதசுகத்திலும் ஆகமசேநின்சுகம்.
௧௩ கற்றவர்க்கெவரும் உற்றவராவர்.
௧௪ சற்குருவணக்கம் சர்வசிலாக்கியம்.
௧௫ ஞயமாய்கடந்தால் பயமேயில்லை.
௧௬ டம்பக்கூத்தாம் வம்பர்வார்த்தை.
௧௭ தம்பிக்குத்தமையன் தந்தைசமானன்.
௧௮ நம்பினபெயர்க்கு நயமுண்டாக்கு.
௧௯ பணைஞ்ஞானவைப்பது பக்கத்தேயது.
௨௰ மஞ்ஞுநிச்சயம் மகான்கள்பாகஙம்.
௨௧ யந்திரமபோல யாக்கையைப்பேறு.
௨௨ ரகசியச்சொல்லை அசத்திலடக்கிலை.
௨௩ லட்சியத்தோடு லட்சணம்பற்றறி.
௨௪ வருந்தியழைத்து அருபசியாத்து.
௨௫ கல்வியில்லாதவன் கணணில்லாதவன்.
௨௬ கால்துட்டாகிலும் காலத்தேகொடு.
௨௭ கினேக்கிரபோதே சனையைகிளறு.
௨௮ கீர்த்திக்கழிவு கிஞ்சிதுமில்லை.
௨௯ குடிவெறிகாரன குலத்தைக்கெடுப்பன்.
௩௰ கூட்டங்குமிசனைக கூடியிராதே.
௩௧ கெடுப்படிசடனைக் கொடுப்பதுமேன்மை.
௩௨ கேள்வச்சொல்லையே கேட்டுமுடியேல்.
௩௩ கைப்பொருள்போகுங் கட்சிமேற்படடாள்.
௩௪ கொஞ்சஞ்சொல்லினும் கோலவடாய்சொல்லு.
௩௫ கோபமெய்க்காட்டினும் லோபிகுணவான்.
௩௬ கௌத்துவஞ்செபவது களவுகமொப்பது.
௩௭ சத்துருவாகிலும் மித்திரனுக்கு.
௩௮ சாசகுச்சாலவது யோகமிடப்டமுது.
௩௯ சிட்டசம்செய்யுமுன எச்சரிப்பதுலா.
௪௰ சீர்திருத்தத்திற சிந்தனையைசெலுத்து.

Printed and Published for the Proprietor
at the Brahmavidya Press Chidambaram.

தமிழ் வழக்கு.

தமிழ் என்பது வேங்கடத்துக்குத் தெற்கே தென்கடலுக்குள்ளே உள்ள நிலத்திலே பண்டுதொட்டு வழங்கிவரும் ஓர் பாஷையின் பெயர். இதன் வரலாறு முறையைப் பலரும் பலவாறு கூறுவர். சைவருள், ஓர்சார்பினர், ஆதிகாலத்தில் சிவபிரானே அகத்தியர்க்கு இதனை அறிவுறுத்தினர் என்பர். மற்றொரு சார்பார், முருகபிரானே அகத்தியர்க்கு அறிவுறுத்தினர் என்பர். பின்னொரு சார்பார், சிவபிராமே அமபிகைக்கு உணர்த்தினர் என்பர். ஆருகதர் அவலோகித முனிவரோ அகத்தியர்க்கு அறிவுறுத்தினர் என்பர். பிறரும் பிறகூறுவர். இவர்களுள் ஒவ்வொருவரும் தத்தங் கூற்றையே சாதிப்பர். இவற்றுள்ளே சத்தியம் என்றுகொள்ளத்தக்கது யாது?

தொல்லாசிரியர் நூலுரைகளுள்ளே, தமிழ் என்னுஞ் சொற் பிரயோகமேயன்றி அதற்காரணக்குறி என்பதும், அதனபொருள் இது என்பதும் புலப்பட்டில. இப்பொழுது ஆசிரியர் ஒருவர், "தமிழ் என்னுஞ்சொல் இனிமைப் பண் புணர்த்தும்" என்றும் "அது" தமிழ் நவியசாயலவர் என்னுஞ் சிந்தாமணியினுலுந் தெளிக." என்றும் "தமிழ் என்னுந்தருமிவாசகந் தருமிமேனிற்றது முருகு என்னும் பண்பு முருகன் என்னும் பண்புமேனின்றவாறுபோல" என்றுங் கூறினர். "தமிழென் பதினிமை நீர்மை" என நிகண்டிற்குஞ் சிறுவரும் அறிதலின் சிந்தாமணிப் பிரமாணம பயிற்சி வெளியீட்டுக் கன்றி இதன் பொருட்டெழுதல் அநாவசியகமே. தருமிவாசகமாவது யாது? அது தருமிமேனிற்றல் எங்ஙனம்?

வேந்தன், அரசன், வேடன், மருகன், பாகன் என்பன ஈறுவிகாரமாகி உகரம்பெற்று, வேந்து, அரசு, வேடு, மருகு, பாகு என நின்றதுபோல முருகன் என்பதும் அம்முடியடைந்து முருகு என நின்று குமாரதெய்வத்தை உணர்த்தும். முருகன் எனனுங் காரணக்குறிபின்பிராதிபதிகமுமஇளமைப்பண் புணர்த்தும் "முருகு" எனபதாகலின் இதுபாரையும் மயக்கும். இங்ஙனம் சொற்பொருள் கூறி மயங்கினர் பலர்; வடமொழி தென்மொழி மகோதரபருகிக்குசை நுனிபதனிற் கூர்மதிபெற்றும் "வலிமுகம்" சாகாமிருகம் முதலியவற்றில் மயங்கினுர் ஒருவர்; வெள்ளை போலப்பண்பெனின், அது முருகன் என்னுஞ்சொல் இல்வழி எனவும், கருமை இளமை முதலியனவும் இடங்குறிபாது குணிகட்காகி வரம்பிறக்கும் எனவும் மறக்கப்படும். முருகு என்பதற்கு நச்சினுர்க்கினியார் கூறிய முடிபையும் ஆய்ந்து தேறுக. இங்ஙனமாதலின், அதனைப் பண்பென்றலும அதற்குத் தமிழிற்குஞ் சாமியம் உண்டென்றலும் அமையாதென்க.

"இருமொழிக்குங் கண்ணுதலர் முதற்குரவர்" "ஆரியத்தோடுமிழ்கருந்தமிழ்" ஆரியமுஞ் செந்தமிழுமாராய்ந்திதனினிது, சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்" என்னும் ஆப்தவாக்குகளினுல் இருமொழிக்கும் முதலாசிரியர் ஒருவர் என்பதும், இரண்டும் பாஸ்பரசமத்துவமுடையன என்பதுவும இனிது பெறப்படும். இவற்றுள் ஒன்றினை இனிமையுடையதாகச் செய்தார் என்பதும அதுபற்றி அத[illegible] "தமிழ்" எனக்குறியீடு செய்தார் என்பதும் ஆசிரியர்க்கு நீதியாகுமா? இதன்பாலுள்ள இனிமை பற்றையதன் மாட்டில்லையா? ஆசிரியர்க்கு அது கருத்தாயின், பண்பியாக உதவாரா?

பற்றுத் தொல்லாசிரியர்களுக்கும் அக்கருத்தாயின், அப்பொருள்பட்ட பரியாயங்களாற்கூறுதொழியார்; அங்ஙனங் கூறுமையாயினும், "இனித்தமிழினிமையாவர்,, "கொடுந்தமிழ்,, "இசைத்தமிழ்,, "அருந்தமிழ்,,எனவருந்தொல்லோர் செய்யுட்களில் "கரிகரம்,, போலத் தானுங்கள்ளற்கு அப்பொருள் இயையாமையானும் 'தமிழ்மொழி, என்பதற்கு அங்ஙனம உரைத்தல் சிறிதும பொருந்தாது.

தமிழிற்குத் தென்மொழி என்னுங் காரணப்பெயரும் ஒரு பரியாயநாமம. தெற்கின்கண் வழங்குங் காரணம்பற்றியே தென்மொழியென்றார். வடமொழிபோல இது, "தென்றிசைத் தமிழானனி,, "வடதிசை மொழியுந் தென்றிசை மொழியும்,, "வடகடல் தென்கடல்,, "வடமொழி தென்மொழி,, என்றற்றொடக்கத்தக்க ஆப்த யுக்திப்பிரமாணங்களானும், பிறவாற்றானும் நன்கு துணியப்படும. இதனை மறுக்கவல்லவர் யாவர்! தென்மொழி என்பதற்கு அழகுடைய பாஷை என்பது பொருளாமாயின், தொல்லாசிரியருள ஒருவராவது "மொழி,, என்பதன் முன் அழகுணர்த்துஞ் சொற்புணர்த்தி அங்ஙனங்கொள்ளக்கூறுரா? அன்றியும இப்பிரமாணங்களோடு மாறுபடலன்றி மற்றைய பாடைகள் அழகில்லாதனவா? என்னுங் கடாவுக்கும் இடனுகுமே. ஆதலின், தென்மொழி எனபதில "தென்,, என்பது திசை குறிக்குஞ் சொல்லென்றுணர்க.

தென்னுட்டினர் தமிழ் எல்லையில் இருந்துகொண்டு அதனைத் தென்மொழியென்று திசையடுத்து விசேடித்தல் வழக்கன்றெனின், நன்று! நன்று! தென்மொழி யென்னுங் குறியீடு ஆதியிலே யாராற் போந்தது? அவ்வெல்லையுள்ளாரே பொதியமலையைத் "தென்மலை,, என்றும், ஆண்டைக்காற்றைத் "தென்கால் என்றும்;,, மண்ணிடைமாக்தர் "சைவர்,, என்றும் வழங்கலானும், "தென்கயிலை" தென்பாலியயம் என அவற்றின் தென்பாலருங் கூறுதலானும் ஆசிரியர் குடநாட்டு வீற்றிருந்தழித்தமது நாட்டையே மேனுடு எனப் பிரசித்தஞ்செய்தமையாலும், கோவை வழக்கினுலும் வழக்காறு அன்றெனல் பொருந்தாது.

இனித் "தென்மொழி = இசையுடையமொழி,, என்பதேனும் பொருந்தாதா? எனின், அதுவும் பொருந்தாது; என்னை? இசையுடையமொழி தமிழ்தானு? ஆரியம் இசையில்லாததா? உரப்பியும், எடுத்தும் கனைத்தும், கூறும் வல்லோசையோடு விளவித் திரிபெய்துதலின், அத்துணை மெல்லோசையின்பம் அதற்கில்லையெனின், உரப்பியும் எடுத்துங் கூறுவதா? ஓரோவிதமந்தகதிபாகக் கூறுவதா? எது ஓசையின்பம் பயக்கும்? சங்கீதநூலார் எங்ஙனங்கொண்டார்? உதாத்தாதிகளை ப[illegible]யவேதம ஓசையின்பம் இல்லாததா? அங்கிலேய மொழியா? தென்மொழியா? மெல்லோசை இன்பமுடையதா? இன்னும் ஓசை

யின்பமுண்டாவது யாது என்பதை இசைததமிழ்வல்லார்மாட்டும் எஃகுசெவியுடையார் மாட்டும் கேட்டுணர்க் தமைக.

இனித் தேன்மொழியே தென்மொழிஎனக் குறுகிற்று என ஒருவர் ஒருப்பட்டுப் பல திருட்டாந்தங்காட்டி வெகுதூரமே போகிறார். (இஃதைப்பற்றி எமது தாற்பரியம் பிறகு வரைவாம்.)

அ. போ. னி.

சென்னை இந்துடிராக்ட் ஸொஸைட்டியின் கோயமுத்தூர் கிளைச்சபை.

1888ஞு மேமீ 13உ கோயமுத்தூர் நேடிவ் ஹைஸ்கூலில் ஓர் சபை கூடினார்கள். அன்று அநேகதனவான்கள் வந்திருந்தார்கள்; அப்போது ம-ா-ா-ஸ்ரீ C- டஜங்கராவ் B. A. அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ம-ா-ா-ஸ்ரீ N- இராமய்யரவர்களா லாமோதிக்கப்பட்டபிரகாரம் டிஸ்திரிக்ட் கோர்ட் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ N- நரசய்யரவர்கள் சபாநாயகராக வீற்றிருந்தனர். அக்காலத்து நடந்த விஷயங்களாவன:—

இந்து சமய சித்தாந்தமறியாத இந்துஜனங்களைப் புறமதஸ்தர் துர்ப்போதனைபுரிந்து தங்கள் மதஸ்தர்களாகச் சேர்த்துக்கொள்வதால் அம்மதங்களை நியாயஹேதுவாதுவால் கண்டித்து, இந்துமதத்தை நிலைநிறுத்தவும், பொதுஜன க்ஷேமத்தை விருத்திபண்ணவும், இன்னும்பல நன்மைகள் செய்யவும் சென்னையில் இந்து டிராக்ட் ஸோஸைட்டியென ஓர்சங்கம் பலபரோபகாரிகளா லேற்பட்டிருக்கின்றது. அதற்குக் கிளையாகக் கோயமுத்தூரிலும் ஓர்சபையிருக்கவேண்டுவது அத்தியாவசிகமாயிருக்கின்றதெனவும் ஷை மூலசபையின் சட்டத்தையநுசரித்துப் புறமதங்களைக்கண்டித்தல், சொந்தமதத்தையபிவிர்த்திபாக்கல், பொதுஜன நன்மைபுரிதல் முதலிய காரியங்களைச் செய்யவேண்டுமெனவும் உறதிப்படுத்தி, ஷை இந்துடிராக்ட்ஸொஸைட்டியின் கிளையாக ஓர்சங்கம் ஸ்தாபித்து, அதினின்றும் 12- பெயரடங்கிய நிர்வாகசபை யொன்றும் யேற்படுத்தி இனி நடக்கவேண்டிய விஷயங்கள் யாவும் ஷை நிர்வாகசபை யாரே செய்யவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டன. நடந்தவிஷயங்களைச் சென்னையிலுள்ள ஷை சொஸைட்டியார்க்கு எழுதி அனுப்பினார்கள்.

சென்னையிலிருந்து ஷை இ- டி ஸோஸைட்டியாரா லனுப்பப்பட்ட இந்துமதப் பிரசங்கியார் ம-ா-ா-ஸ்ரீ அரங்கசாமிமுதலியாரவர்கள் தினந்தோறும் வீதிகளினின்றும் பிரசங்கம் செய்வதுடன், ஷை கிளைச்சபை யேற்படுத்தவும் தூண்டுதல் செய்து, ஷை 13உ கூடிய மேற்படி சங்கத்தும் இவ்விஷயத்தைச்சுட்டிப் பிரஸ்தாபம் செய்ததின் பேரில் யாவரும் மனப்பூர்வமாய் இப்படிப்பட்ட ஸொஸைட்டியொன்றிருக்கவேண்டுவது இன்றியமையாதனவெண்ணிக் கிளைச்சங்கத்தை ஏற்படுத்தினார். இனிச் செய்யவேண்டிய அலுவல்களைக் கிரமமாக அபிமானத்துடனும் ஐக்கியத்துடனும் சகோதரவாஞ்சையுடனும் செய்து, இந்து மதத்தையும் தேசக்ஷேமத்தையும் பாதுகாக்க எல்லாம்வல்ல பரமேஸ்வரனைப் பணிவோமாக.

கோயமுத்தூரில் கிறிஸ்தவர்கள் உபத்திரவம் விசேஷமாயிருக்கின்றது. ஆதலால் இச்சொஸைட்டியார் எடுத்த சற்காரியங்களை ஊக்கத்துடன் பிடிவாதமாய் விடாதுசெய்வார்களானால், தாய்தந்தைகள் பெற்றெடுத்து நாளொருமேனிப் பொழுதொருவருணமாக வளர்த்துப் பாதுகாத்த மக்களை அந்நியர்கையில் ஒப்புவித்து, என்றும் நீங்காத்துயரக்கடலில் மூழ்கார்கள். எப்புண்ணியங்களினும் இது மேலாயதென்பது யாமுணர்த்தவேண்டுவதில்லை. ஒவ்வோர் நகரவாசிகளும் இவ்வாறு முன்னிற்பார்களானால் இந்துஜனக்கூட்டம் குறையாது. அந்நியர் தந்திரமாகவும் சூதாகவும் வஞ்சகமாகவும் இரகசியமாகவும் விரைவாகவும் தம்மதமாக்கும் உளவைஉற்றறியவேண்டும். "வெளுத்த தெல்லாம் பால், கருத்ததெல்லாம் நீர்," என்றெண்ணப்படாது. அங்ஙனம் நினைத்துத்தான் நமது சகோதரர்களைப் புறப்புறச் சமயிகளுக்கு இழந்தோம்; இன்றும் இழந்துவருகின்றோம். இது மட்டும் நாம் இவ்விடயத்தினைச் சுட்டி நினைத்ததேயில்லை. இப்போதுதான் சிறிதுநினைக்க இடமாயிற்று. இனி விடப்படாது. நமது மதஸ்தர் புறமதத்திற் செல்வதை நாம்பார்த்துக்கொண்டிருத்தல் கூடாது. நாம் புத்திமதிகளையெடுத்துரைத்துப் புறமதமின்னதென்றும் புறப்புறமதமின்னதென்றும் அவற்றால் வரும் நஷ்டமிப்படிப்பட்டதென்றும் நமது வைதிகமதத்தாலாம் நயமின்னதென்றும் உணர்த்தித் தடுக்கவேண்டும். தாழ்ந்தோர் புறமதத்திற் செல்வதைப் பற்றி நாமிதுகாறும் கவலை கொள்ளாதிருந்தோம்; அதனால் இப்போது பெரும் ஆபத்து வந்திருக்கிறது; அதையுணர்ந்து இனி ஒருவரேனும் இதரமதங்களில் செல்லவிடந்தராது காக்கவேண்டும். எந்தக்குலத்தாரேனும் ஒருவர் புறமதங்களிற் செல்வாரானால் நமது சரீர உறுப்புக்களி லொன்று போவதாய்க் கருதவேண்டும்; இவ்வண்ணமாய எண்ணம் என்று நமக்குஉதிக்கின்றதோ, அன்றுதான் நமது வைதிகமதம் நிலைபெறும்; இது சத்தியம் சத்தியம்; அன்னியர்க்கிவ்வாறான எண்ண மிருப்பதால் தான் அன்னியமதம் விருத்தியாகின்றது.

அன்பர்களே!! இவ்விஷயத்தைக் கவனித்து ஊர்கடோறும் சமய சங்கங்களை ஏற்படுத்தி இ- டி ஸோஸைட்டிக்கு உதவிபுரிந்து அவர்க ளியற்றுங் காரியங்களைக் கூடவிருந்து செய்வீர்களாக. உங்களுக்குக் கோடிவந்தனம் மனமகிழ்ந்து தந்தோம்.

சற்புத்தி கூறுவோன்.

ஓம் ஸ்ரீ ஸத்குரு சேஷாத்ரிஸ்வாமிப்யோ நம:

(கிரந்த எழுத்தில் உள்ள வரிகள்)

ஸ்ரீ... ஸ்ரீ ப்ரஹ்மவித்யா...

[illegible]

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்ட அப்பய்யதீக்ஷிதரவர்களுடைய கிரந்தங்களின் விளம்பரம்

	விலை.		
சிவதத்த்வவிவேகம்	2	0	0
மத்வமதவித்வம்சனம்.	0	12	0
ப்ரம்மதர்க்கஸ்தவம்-	0	8	0
ஆதித்தியஸ்தோத்திரரத்தினம்.	0	4	0
சிவமகிமகலிகாஸ்துதி-	0	7	0
சிவத்தியானபத்ததி-	0	1	0
இராமாயணதாற்பரியசங்கிரகம்.	0	2	0
பாரததாற்பரியசங்கிரகம்-	0	2	0
சித்தாந்தலேசசங்கிரகம்-	1	0	0
ஆத்மார்ப்பணஸ்துதி / மானஸோல்லாசம்	,,	,,	௬

பட்டஸ்ரீ நாராயணசாஸ்திரிகளியற்றிய தண்டகங்களும் நாடகங்களும்

சூரமயூரநாடகம்-	0	6	0
ஜைத்திரஜைவாதிருகம்-	0	6	0
சர்மிஷ்டாவிஜயம்-	0	6	0
மகேசுவரதண்டகம்-	0	1	0
ஆரியாதண்டகம் லக்ஷ்மிஸ்தோத்திரம்-	0	1	0
சாமருத்திரசம்ஹிதாபாஷ்யம்-	0	8	0

இஃது மகாமகோபாத்தியாய இராஜுசாஸ்திரிகளவர்களால்செய்யப்பட்டது.

சௌமியசோம நாடகம்-	0	5	0

இந்நாடகம் ப்ரம்மவித்தியா பத்திராதிபர் கு-ஸ்ரீநிவாசசாஸ்திரிகளா லியற்றப்பட்டது.

நீதிக்கீர்த்தனை-	0	1	6
விசாகதுலாபாரப்பிரபந்தம்-	0	1	6

போதாரியா—இதுஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளருளிச்செய்தவோர் வேதாந்தப்பிரகரணம். விலை அணா க.

முக்கலாரியா;—இது முக்கல பட்டரியற்றிய ஒருஇனியஇராமதோத்திரம். விலை அணா ௨-

நந்திகேசுவர காசிகா:—இது வியாகரணசாஸ்திர மூலசூத்திரங்களாய கசு- சூத்திரங்-களுக்குரை. விலை அணா க-

ஆனமாவும் சரீரமும:— இது நாஸ்த்திகர் கேள்விகளுக்குவிடை. விலை அணா க-

ஸதாசிவபிரம்மாரியா / சிவமானசிகபூஜா	,,	,,	௬

ஸ்ரீராமபத்திரவிஜயம்	,,	அ	,,
பிரஸன்னோத்தரராமாயணம்	,,	௫	,,
தோத்திர சங்கிரகம்	,,	௨	,,
இராமாயணவினாவிடை	,,	௩	,,
சிதம்பரமாஹாத்மியம்	,,	அ	,,
துதிசங்கிரகம்	,,	க	0
விசாகநட்சத்திரமாலிகை	,,	,,	௬
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்ப்புராணம்	,,	௬	,,
கந்தபுராணநவநீதம்	,,	௧௨	,,
பஞ்சதசோபநிஷத்து	க	௨	,,

அஷ்டாங்கயோகம்	,,	ரு	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	க	,,
யேசுகிறிஸ்து மனிதனே	,,	,,	சா
நீதிநெறிவிளக்கவுரை	,,	ச	,,
சிவோத்கிருஷ்டதீபிகை	,,	க	,,
திருமுருகாற்றுப்படைக்கு உரையாளர் பரிமேலழகருரை	,,	உ	,,
திருத்தணிகை பதிற்றுப்பத்தந்தாதி	,,	க	,,
சதாசிவரூபம்	,,	உ	,,
செஞ்சுவிந்தாது	,,	,,	சா
உருத்திராக்கமாலை	,,	,,	சா

அறிவிப்பு

சர்வதாரிவருஷத்து
ரிப்பன் தமிழ்ப்பாக்கெட்
பஞ்சாங்கம்-
தயாராயிருக்கிறது.

புத்தகம் 1-இ விலை அணா 6. தபால்பாகிங்சார்ஜ் அணா I. 10இ ஒன்றும் 25 இ 3. ம் 50 இ 7. ம் 100இ 15 ம். அதிகமாகக்கொடுக்கப்படும்.

இங்ஙனம்
சை இரத்தினசெட்டியார்.
புரோப்ரயிட்டர்
மதராஸ் ரிப்பன் பிரெஸ்
316. தம்புசெட்டிவீதி
சென்னை.

இந்து டிராக்ட் ஸொஸைட்டி

(இந்த இந்துசங்கம் கலியுகாதி சகூஅகூ-வது சர்வஜித்துஹு சித்திரை மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

இச்சங்கத்தின் முக்கிய கருத்துகள்:—

(I) இந்துமதத்தைப் பரவச்செய்தல்; அதன விரோதிகளை கண்டித்து அதைப் பாதுகாத்தல். (2) இந்து மகாஜனங்களுடைய யோகக்ஷேமத்திற்காகப் பாடுபடுதல். (3) நீதிமார்க்கங்களையும், கல்விவிஷயங்களையும் ஆதரித்து அபிவிருத்திசெய்தல்

சுதேசபாஷைகளிலும் இங்கிலீஷிலும் சிறு பத்திரிகை புத்தகம் இவற்றைப் பரவச்செய்தும், பகிரங்க உபந்யாசம் புரிவித்தும், வாதம் செய்வித்தும் மேற்படி கருத்துகள் நிறைவேற்றப்படும்.

இச்சங்கத்துக்கு வருடம் 1-இ சந்தா குறைந்தது ரூபா I—4—0
(இது முன்பணமாகக் கட்டவேண்டியது.)

அக்கிராசனாதிபதி:—ப்ரம்மஸ்ரீ, ம-௱-௱-ஸ்ரீ ஆர். சிவசங்கர. பண்டியா அவர்கள், பி-எ. எப்-டி-எஸ்

காரியதரிசி:—ப்ரம்ம ஸ்ரீ ம-௱-௱-ஸ்ரீ, தீ. வி. பெரியசாமி ஐயரவர்கள்

சுதேசாபிமானிகளான இந்துக்கள் யாவரும் இந்த மத சங்கதிற்குத் திரவியசகாயம் செய்யப் பிரார்த்திக்கப்படுகின்றார்கள். இச்சங்கத்தில் சேர்ந்தவர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதியில் இந்துடிராக்ட்ஸொஸைட்டியின் காரியதரிசியவர்கள் பேருக்குத் தபால்சார்ஜுக்காக அரை அணாத் தலை அனுப்பினால், ஷ அக்கிராசனாதிபதி அவர்களால் இயற்றப்பட்ட இந்துமத வினாவிடையென்னும் புத்தகத்தை யினாமாகப் பெறுவார்கள். இச்சங்கத்தைப்பற்றி இன்னும் யாதேனும் கேட்கவிரும்புவோர், காரியதரிசி அவர்களுக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.

1817-ஹு மார்ச்சுமீ த்தில் சென்னை "வேதாந்த விசாரணசபையார்" உலகமும் ஆத்துமாவும் சத்தா? அசத்தா? சதசத்தா? என்னும் வினாக்களைச் சிறு பத்திர வாயிலாகக் கிறிஸ்தவரைக் கேட்டார்கள். அவ் வினாக்களுக்கு விடை பைபிலின்கண் ஆதாரமில்லாதிருந்தும் நான்கு கிறிஸ்தவர், தனித்தனியே பொருத்தமில்லாத விடையளித்தார்கள். அதனுபாசம் வெளிப்படும்பொருட்டும், உண்மையை யாவரும் உணர்தற்பொருட்டும் ஓர் சம்ஸ்கிருதபண்டிதர்" ஷவிடைகளைக் கண்டித்து, "கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு" என்னும் புத்தமொன்று ஒன்பது பாரத்தில் அச்சிட்டிருக்கின்றார். சமய ஆராய்ச்சிசெய்யும் யாவரும் அதை வாங்கிவாசிக்கவேண்டியதே. விலையும் சொற்பம்; காகிதமோ உயர்ந்தது. வேண்டியவர், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதி 316-வது. மதராஸ் ரிப்பன் பிரஸில் ம-௱-௱- ஸ்ரீ சை. ர. நமசிவாயசெட்டியாரிடத்திலும், சிதம்பரம ப்ரம்மவித்தியாபத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ சு. சீநிவாசசாஸ்திரியாரிடத்திலும் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா 2. தபாற்கூலி பை 6.

கடிதர்கவனிப்பு

I- கடிதக்காரர்கள் எழுதப்புகுந்த விஷயங்களை நல்லவெண்மையாகிய காகிதத்தின் ஓரேபுறத்தில் கறுத்தமசியுடன் வரிகள் ஒன்றுக்கொன்று நெருங்காமலும், அட்சரங்கள் தனித் தனியே புலப்படும்படி திருத்தமா யெழுதல்வேண்டும்.

2- படிப்பவர்களுக்கு அறிவையும் மகிழ்ச்சியையும் வியப்பையுந்தரத்தக்க நற்பொருள்களையே அமைத் தெழுதல்வேண்டும்.

3- பயனில்லாத சொற்றொடர்களையும் சிந்தித்தல் நிறைந்த வாக்கியங்களையும் கடிதத்தில எழுதலாகாது.

4- பொருள நன்றாய் விளங்கும்படி வாக்கியங்களை இயன்றமட்டும் சுருக்கி எழுதல்வேண்டும்.

5- கடிதக்காரர்கள் தத்தம் உண்மையான ஊர் பெயர் விலாசம் முதலியவைகளை பத்திரிகாசாரியருக்கு மாத்திரம் விளங்கும்படி கடிதத்தின் கீழ்ப்புறத்தில் வரையவேண்டும்.

6- பத்திரிகையில் பிரசுரிக்கத் தகாததாகக் காணப்படுகிற கடிதங்கள், கடிதர்களுக்குத் திருப்பியனுப்பப்படா. காரணமுங்கிடைக்காது; சுய தங்கள் இருள்ள கடுஞ்சொற்களும் தீப்பொருள்களும் நீக்கப்படும். அந்தரங்க கடிதக்காரர் பெயர் எவ்விதத்திலும் காக்கப்படும். கடிதர்களின் அபிப்பிராயங்கள் பத்திராசிரியரைச் சாராவாட்டா.